# கம்பம் நகராட்சி

**2019—ஆம் ஆண்டு ஜூலை மாதம் (31.07.2019) ஆம் நாள் புதன் கிழமை பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

**1.** நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொறுப்பு) அவர்களின் 7/2019—ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**2.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1757, நாள். 13.06.2019 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 12.07.2019—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | <u>பொதுநிதி 2019—2020</u><br>இந்நகராட்சிக்குட்பட்ட கம்பராய பெருமாள் கிழக்கு வாசல் , ராமையன் தெரு, குரங்குமாயன் தெரு, காளவாசல் ரோடு, செக்கடி தெரு ஆகிய பகுதிகளில் பழுதடைந்த உடைந்த நிலையில் உள்ள சிறுபாலங்களை அகற்றிவிட்டு புதிதாக சிறுபாலங்கள் அமைக்கும் பணி | 5,00,000/— | வி. கிருஷ்ணன் | — | 0.06 |
| | | | எல். ராஜேந்திரன் | 0.72 | — |

**அலுவலகக்குறிப்பு : — 1)**வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. வி. கிருஷ்ணன், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.06 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 415—1/2019/இ1)

**3.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1765, நாள். 28.06.2019 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 24.07.2019—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | <u>பொதுநிதி 2019—2020</u><br>இந்நகராட்சிக்குட்பட்ட கம்பம் — குமுளி சாலையில் உள்ள உரக்கிடங்கில் தண்ணீர் தொட்டி மற்றும் தீயணைப்பு ஹோஸ் மற்றும் கருவிகள் அமைக்கும் பணி | 9,00,000/— | திருவாளர்கள். ஏ.பி. கன்ஸ்ட்ரக்சன் | — | 0.65 |
| | | | ஆர். சபீர்அலி | 2.10 | — |

**அலுவலகக்குறிப்பு : —** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திருவாளர்கள். ஏ.பி. கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.65 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். ந.க.எண்.1492/2019/இ1)

**4.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1766, நாள். 28.06.2019 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 24.07.2019—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | <u>பொதுநிதி 2019—2020</u> இந்நகராட்சி ஆங்கூர்பாளையம் நுண்உர செயலாக்க மையத்தில் உரம் உலர்வைக்க ஷீட் , தீயணைப்பு ஹோஸ் மற்றும் கருவிகள் அமைக்கும் பணி | 9,00,000/— | பி. பாலமுருகன் | — | 0.40 |
| | | | ஜி.எம். மணிகன்டன் (எ) சுப்பிரமணியன் | 2.71 | — |

**அலுவலகக் குறிப்பு : —** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. பி. பாலமுருகன், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.40 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். ந.க.எண்.1492—1/2019/இ1)

**5.** இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். டிஎன். **60 V 2194** வாகனத்திற்கு காப்பீடு காலம் **15.08.2019** தேதி முதல் புதுப்பிக்க வேண்டி உள்ளது. மேற்படி வாகனத்திற்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கம்பம் மூலம் வாகன காப்பீட்டு நிறுவனத்திற்கு காப்பீடு புதுப்பிப்பு கட்டணம் ஒரு ஆண்டு காலத்திற்கு ரூ.**12,623/—**ஐ (ரூபாய் பன்னிரெண்டாயிரத்து ஆறுநூாற்று இருபத்து மூன்று மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம்.

**6.** இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.1785, நாள்5.7.2019—ம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி இந்நகராட்சி வார்டு எண் 30 ஆங்கூர்பாளையம் ரோடு, வார்டு எண். 31, கக்கன் காலனி, திருவள்ளுவர் காலனி ஆகிய பகுதிகளில் பகிர்மான குழாய் பதித்தல் மற்றும் வார்டு எண். 1, 7, 19, 14, 25 ஆகிய வார்டுகளில் வால்வுகள் அமைக்கும் பணிக்கு 24.07.2019—ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவுக்கும்.

| வ . எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | கூடுதல் |
| 1 | இந்நகராட்சி வார்டு எண் 30 ஆங்கூர்பாளையம் ரோடு, வார்டு எண். 31, கக்கன் காலனி, திருவள்ளுவர் காலனி ஆகிய பகுதிகளில் பகிர்மான குழாய் பதித்தல் மற்றும் வார்டு எண். 1, 7, 19, 14, 25 ஆகிய வார்டுகளில் வால்வுகள் அமைக்கும் பணி | 9,90,000 | கே.எம்.பி.எல். எலக்ட்ரிக்கல்ஸ், கம்பம் | | 0.58 |
| | | | எல்.ராஜேந்திரன், கம்பம் | 0.05 | |

**அலுவலககுறிப்பு:–** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட(–)0.05 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு எல்.ராஜேந்திரன், கம்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2332/2019/இ2)

**7.** இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.1786, நாள்5.7.2019–ம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி இந்நகராட்சி வார்டு எண் 32 முத்துசாமாண்டி பிள்ளை தெரு, வார்டு எண். 31, காந்திநகர், கக்கன் காலனி, நந்தகோபால்சாமி நகர், எல்.எப். ரோடு, வார்டு எண். 29, ரேஞ்சர் ஆபிஸ் ரோடு ஆகிய பகுதிகளில் பகிர்மான குழாய் அமைக்கும் பணி 24.07.2019–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவுக்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | கூடுதல் |
| 1 | இந்நகராட்சி வார்டு எண் 32 முத்துசாமாண்டி பிள்ளை தெரு, வார்டு எண். 31, காந்திநகர், கக்கன்காலனி,நந்தகோபால்சாமி நகர், எல்.எப். ரோடு, வார்டு எண். 29, ரேஞ்சர் ஆபிஸ் ரோடு ஆகிய பகுதிகளில் பகிர்மான குழாய் அமைக்கும் பணி | 4,50,000 | கே.எம்.பி.எல். எலக்ட்ரிக்கல்ஸ், கம்பம் | | 0.84 |
| | | | எல்.ராஜேந்திரன், கம்பம் | 0.09 | |

**அலுவலககுறிப்பு:–** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட(–)0.09 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு எல்.ராஜேந்திரன், கம்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2333/2019/இ2)

**8.** இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 1758, நாள். 13.06.2019–ம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, இந்நகராட்சியில் சுருளிப்பட்டி ரோடு முல்லை பெரியாற்றில் குடிநீர் நீரேற்று நிலையத்தில் உள்ள சுலீஸ் வால்வுகள்அமைக்கும் பணிக்கு 11.07.2019–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவுக்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | கூடுதல் |
| 1 | இந்நகராட்சியில் சுருளிப்பட்டி ரோடு முல்லை பெரியாற்றில் குடிநீர் நீரேற்று நிலையத்தில் உள்ள சுலீஸ் வால்வுகள், என்.ஆர்.வி.வால்வுகள் பிரேக்கர் சுசிட்ச் மற்றும் கேபிள் பொருத்துதல் | 4,30,000/– | கே.எம்.பி.எல். எலக்ட்ரிக்கல்ஸ், கம்பம் | | 0.41 |
| | | | எல்.ராஜேந்திரன், கம்பம் | 0.03 | |

**அலுவலககுறிப்பு:–** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட (–)0.03 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள எல்.ராஜேந்திரன், கம்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 1927/2019/இ2)

**9.** இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 1759, நாள். 13.06.2019–ம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, இந்நகராட்சி சுருளிப்பட்டி நீரேற்று நிலையத்தில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படும் கேஸ் குளோரினேசன் சிலிண்டர் வாங்க 11.07.2019–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவுக்கும்.

| வ.எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | கூடுதல் |
| 1 | இந்நகராட்சி சுருளிப்பட்டி நீரேற்று நிலையத்தில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படும் கேஸ் குளோரினேசன் சிலிண்டர் வாங்குதல் | 2,55,000 | ஸ்ரீசத்யா டைல்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ், ஆண்டிப்பட்டி | 2.38 | - |
| | | | பீபுல் கெமிக்கல் இன்டஸ்ரீஸ், ஆண்டிப்பட்டி | - | 4.76 |

**அலுவலககுறிப்பு:–** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட (–) 2.38 சதவீதம் குறைவாக கொடுத்துள்ளஸ்ரீசத்யா டைல்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ், ஆண்டிப்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 1926/2019/இ2)

**10.** இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 1760, நாள். 13.06.2019–ம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி இந்நகராட்சியில் புதியதாக வாங்கப்பட்ட பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனத்தை சார்ஜ் போடுவதற்கு வசதியாக, அலுவலக வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் மின் இணைப்புடன் பவர் பிளக்பாயின்டுகள் அமைக்கவும், அனைத்தும் சேதமாகி உள்ளதை மின்பராமரிப்பு செய்யவும் பணிக்கு 11.07.2019–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவுக்கும்.

| வ.எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | கூடுதல் |
| 1 | இந்நகராட்சியில் புதியதாக வாங்கப்பட்ட பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனத்தை சார்ஜ் போடுவதற்கு வசதியாக, அலுவலக வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் மின் இணைப்புடன் பவர் பிளக்பாயின்டுகள் அமைக்கவும், அனைத்தும் சேதமாகி உள்ளதை மின்பராமரிப்பு செய்யவும் பணிக்கு | 488000 | கே.எம்.பி.எல். எலக்ட்ரிக்கல் ஸ், கம்பம் | | 0.48 |
| | | | எல்.ராஜேந்திர ன், கம்பம் | 0.01 | |

**அலுவலககுறிப்பு:–** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட (–) 0.01 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள எல்.ராஜேந்திரன், கம்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1925/2019/இ2)

**11.** இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.1761 நாள்,13.06.2019–ம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின்பொருட்கள் வாங்க 11.07.2019–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவுக்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | கூடுதல் |
| 1 | தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின் பொருட்கள் வாங்குதல். | 4,90,000/– | கே.எம்.பி.எல். எலக்ட்ரிக்கல்ஸ், கம்பம் | | 1.23 |
| | | | எல். ராஜேந்திரன், கம்பம் | 0.01 | |

**அலுவலககுறிப்பு:–** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட– 0.01சதவீதம் குறைவாக கொடுத்துள்ள எல். ராஜேந்திரன், கம்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1924/2019/இ2)

**12.** இந்நகராட்சி பகுதி வார்டு எண் . 30 ஆங்கூர்பாளையம் ரோட்டில் நுண் உரம் செயலாக்க மையம் (MCC) கடந்த 22.05.2019 ஆம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது. இதில் வீடுகளில் உருவாகும் மக்கும் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு 14 தொட்டிகளில் மக்கும் கழிவுகள் போடப்பட்டு அதில் EM Solution தெளிக்கப்பட்டு உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மக்கும் கழிவுகள் மூலம் துகள்கள் ஆக்கப்பட்டு, மேற்கண்ட தொட்டிகளில் போடும் போது அதிகளவு ஈக்களால் தொந்தரவு ஏற்படுகிறது. மேற்படி ஈக்களை கட்டுபடுத்துவதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், தேனி அலுவலக கடித எண் 0916/DEE/TNPCB./ Theni/2019 29.06.2019 ஆம் தேதிய கடிதத்தில், ஈக்களை கட்டுபடுத்த செயலாக்க மையத்தில் (MCC) உள்ள 14 தொட்டிகளிலும் ரீப்பர் மூலம் நைலான் வலை செய்து மூடி வைத்து ஈக்களின் தொந்தரவை கட்டுப்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.56,000/ க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு ..** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகதார பிரிவு அவசர அவசியம் கருதியும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி வேலையினை செய்யவும், மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**13.** இந்நகராட்சி பகுதிகளில் தரம் பிரித்து வாங்கப்பட்ட மக்கும் குப்பை கழிவுகளை கொண்டு உரம் தயாரிக்கும் பணி ஆங்கூர்பாளையம் ரோட்டில் அமைந்துள்ள நுண் உரக்கூடத்தில் (MCC) தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. உரம் தயார் செய்யும் பகுதிகளில் நோய் தொற்று ஏற்படா வண்ணம் கிருமிநாசினி தெளிக்க வேண்டியுள்ளதால் 100 லிட்டர் சென்ட் பினாயில் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.10,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)பொது சுகதார பிரிவு அவசர அவசியம் கருதியும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றுஅரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ நிறுவனத்தில் கொள்முதல் செய்யவும், மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2384/2019/எச்1)

| | |
|---|---|
| 14. | சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ், **11** வார்டுகளில் தனியார் மூலம் துப்புரவு பணிகள் செய்வதற்கு **14.02.2019** ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்த விதிகளின்படி தமிழ் வளர்ச்சி மற்றும் செய்திதுறை வழியாக நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு இயக்குநர் Accord Advertising Agencies, சென்னை அவர்கள் மூலம் DIPR/81/TENDER/2019 Dated.**07.01.2019** ன் படி விளம்பரக் கட்டணத் தொகைக்கு பில் வரப்பட்டுள்ளது. எனவே, விளம்பரக்கட்டண தொகை ரூ.**68,947**/ ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** 1) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 4468/2018/எச்1) |
| 15. | இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பொருட்கள் பாதுகாப்பு அறை உரிமத்திற்கான பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி 31.07.2019 அன்று கோரப்பட்டது. இதில் பொதுஏலம் கோர யாரும் முன்வரவில்லை. கீழ்கண்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது. |

| வ. எண் | ஏலம்/ஒப்பந்தப் புள்ளி கோரியவரின் பெயர் திரு. | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாயில்) | 2017–18 குத்தகைத் தொகை | மூன்றாண்டு சராசரித் தொகை (ரூபாயில்) | |
|---|---|---|---|---|---|
| 1) | பி. சடையன் 25/2உலகத்தேவர்தெரு கம்பம் **(ஒப்பந்தப்புள்ளி)** | **67000/–** | **106943/–** | – | **குறைவு** |

**அலுவலகக்குறிப்பு:-** மேற்கண்ட இனமானது தொடர்ந்து 18.06.2019 பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் முன்பணம் செலுத்தி யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. இரண்டாவது முறையாக 11.07.19 அன்று ஒப்பந்தப்புள்ளி/பொதுஏலம் கோரியதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் குறைவான விலை விகிதத்தில் ரூ. 54000/–ற்கு கேட்கப்பட்டதைத் தொடர்ந்து மூன்றாவது முறையாக 19.07.2019இல் மறுஏலம் கோரப்பட்டது இதில் முன்பணம் செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை. இதனைத் தொடர்ந்து நான்காவது முறையாக 31.07.2019 அன்று மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

இந்த பொருள் பாதுகாப்பு அறை உரிமத்திற்கான பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கடந்த ஆண்டு மட்டும் தொடர்ந்து **20.02.2018, 14.03.2018, 27.03.2018, 25.04.2018, 04.05.2018, 13.06.2018, 23.08.2018, 26.09.2018, 11.10.2018, 27.11.2018, 27.12.2018** ஆகிய தேதிகளில் **11 முறை** பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியும் முன்பணம் செலுத்தி யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. 12வது முறையாக கோரியதில் வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளிதாரர் திருமதி ச.அம்சக்கொடி அவர்கள் **3** மாதங்கள் மட்டுமே நடத்தி விட்டு தொடர் இழப்பு ஏற்படுவதாக தெரிவித்து உரிமத்தினை **31.03.2019** இல் திரும்ப ஒப்படைப்பு செய்து விட்டார். தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக **04/19, 05/19, 06/19** மாதங்களுக்கு நிதியிழப்பு ஏற்படாதவாறு நடத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில் **4**வது முறையாக **31.07.2019** அன்று பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் ரூ. **67000/–**க்கு வரப்பெற்றுள்ளது. இந்த குத்தகை இனத்தினை நகராட்சி பணியாளர்களை கொண்டு வசூல் செய்திட அனுமதிக்கும்பட்சம் பணியாளர்களின் ஊதியம் உத்தேசமாக ரூ. **20000/–** வீதம் இரண்டு நபர்களுக்கு மாதம் ரூ.**40000/–**ம் என்ற வகையில் வருடத்திற்கு ரூ. 480000/- செலவினம் ஏற்படும் என்பதாலும் இந்த இனத்திற்கு பலமுறை ஒப்பந்தப்புள்ளி கோரி யாரும் ஏலம் கோர முன்வராத நிலையில் தொடர்ந்து இழப்பிடு ஏற்படாத வகையில் வரப்பெற்ற திரு. பி. சடையன் அவர்களின் ரூ.**67000/–**ற்கான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

மேலும் ஒப்பந்த விதிமுறைகளின்படி, நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு **01.07.2019** முதல் **31.07.2019** வரையிலான ஏலம் போகாத காலத்திற்கு ரூ. **9363/–**னை திருமதி ச. அம்சக்கொடி அவர்களின் வைப்புத்தொகையிலிருந்து ஈடுசெய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 16. | இந்நகராட்சிக்கு தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் ஈப்பு வாகனம் TN 60 T 7497 க்கு தகுதி சான்று பெற உரிய பணிகள் செய்ய 12.04.2019 ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. |

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விபரம் |
|---|---|---|
| 1. | ஏ.எம் .எண். மோட்டார்ஸ், கம்பம். | ரூ. 22000.00 |
| 2. | பரமசிவம் ஆட்டோ கேரேஜ், கம்பம். | ரூ. 22350.00 |
| 3. | லட்சுமி ஆட்டோ கேரேஜ், கம்பம். | ரூ. 22500.00 |

**அலுவலகக்குறிப்பு ..**

1) வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் கம்பம் ஏ.எம்.எண். மோட்டார்ஸ் நிறுவனத்தார் ரூபாய் 22000.00 க்கு கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

2)பொதுமக்களின் நலன் கருதி தெரு விளக்கு பராமரிப்பு பணிக்கு ஈப்பு வாகனம் அவசியம் தேவையாவதால், தேர்தல் நடத்தை விதி முறைகள் அமலில் இருந்தபடியால்இ மன்ற அனுமதியை எதிர்நோக்கி, ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி நிறுவனத்தாரிடம் பணிகள் செய்து 23.04.2019 ம் தேதி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் தகுதி சான்று பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 17. | இந்நகராட்சியில் வாரச்சந்தையில் இரவுக் காவலராக பணிபுரிந்து 15.10.2009–ல் பணியிடை மரணமடைந்த திரு. பி. நாகராஜன் மனைவி திருமதி. சந்திரா என்பவர் தொடர்ந்த வழக்கில் வரப்பெற்ற தீர்ப்பின் மீது திரு. ஹேமாகார்த்திகேயன், வழக்கறிஞரை கொண்டு மேல்முறையீடு செய்யவும், அதற்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 15,000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. அனுமதிக்கலாம். (ந.க.எண். 1473/219/சி1) |
| 18. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் உள்ள மனைகளை வரன்முறைப்படுதுவது தொடாபாக தமிழக அரசின் அரசாணை எண். 78/2017, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172/2017 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் மூலம் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டதினை பின்பற்றி இதுவரையில் 428 தனிமனைகளின் விண்ணப்பங்கள் பெறப்பட்டு சுமார் 358 தனி மனைகள் வரன்முறைப்படுததப்பட்டு அதற்கான அபிவிருத்தி கட்டணம் ரூ. 144.40 இலட்சம் மற்றும் வரன்முறை கட்டணம் ரூ. 60.99 இலட்சம் வசூல் செய்யப்பட்டு நகராட்சி கருவூலம் மற்றும் அரசு கருவூலகங்களில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் அமைந்துள்ள தனி மனைகளை மேற்படி அரசாணையில் வழங்கப்பட்ட நெறிமுறைகளின்படி அனுமதி வழங்கப்பட்ட ஏனைய பகுதிகளில் மண்சாலைகளாக உள்ளது. அதன் விபரம் பின்வருமாறு. |

மண்சாலை விவரப்பட்டியல்

| வ.எண் | அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் அமைந்த மண்சாலை தெருவின் பெயர் | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1 | வா.எண். 3, எல்.எப்.ரோடு குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி | 0.50 |
| 2 | வா.எண். 1, விவேகானந்தர் குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி | 2.50 |
| 3 | வா.எண். 31, காந்திநகர் விரிவாக்கப்பகுதி | 1.20 |

| | | |
|---|---|---|
| 4 | வா.எண். 29, மஞ்சக்குளம் ரோடு விரிவாக்கப்பகுதி | 2.50 |
| 5 | வா.எண். 19, காளவாசல் குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி | 1.50 |
| 6 | வா.எண். 28, வீ.எம். சாவடி தெரு (பிந்து நகர்) விரிவாக்கப்பகுதி | 1.50 |
| 7 | வா.எண். 28, முத்துராமலிங்கம் நகர் குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி | 1.20 |
| 8 | வா.எண். 31, எல்.எப்.ரோடு (சி.பி.யு பள்ளி அருகில்) விரிவாக்கப்பகுதி | 2.00 |
| 9 | வா.எண். 29, ரேஞ்சர்ஆபிஸ் ரோடு குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி | 0.70 |
| 10 | வா.எண். 29, ரேஞ்சர் ஆபிஸ் ரோடு குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி | 0.80 |
| 11 | வா.எண். 29, ரேஞ்சர் ஆபிஸ் ரோடு குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி | 0.90 |
| 12 | வா.எண். 31, CMS நகர் மெயின் மற்றும் குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி | 2.00 |
| 13 | வா.எண். 3, குரங்குமாயன் தெரு விரிவாக்கப்பகுதி | 1.00 |
| 14 | வா.எண். 3, குரங்குமாயன் தெரு விரிவாக்கப்பகுதி | 0.50 |
| 15 | வா.எண். 9, சுப்பிரமணியசாமி கோவில் தெரு விரிவாக்கப்பகுதி | 1.00 |
| 16 | வா.எண். 31, கக்கன் காலனி குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி | 1.50 |
| 17 | வா.எண். 4, கே.கே. பட்டி ரோடு குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி | 1.50 |
| 18 | வா.எண். 33, ஏகலூத்து ரோடு குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி | 1.20 |
| 19 | வா.எண். 31, நந்தகோபால் நகர் குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி | 2.50 |
| 20 | வா.எண். 4, மாலையம்மாள்புரம் குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி | 3.60 |
| | மொத்தம் | 30.10 கி.மீ. |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பகுதிகளில் உள்ள மண்சாலைகளை நகராட்சிக்கு கையகப்படுத்தி வருங்காலங்களில் தார்சாலைகள் , கழிவு நீர் வடிகால் மற்றும் அடிப்படை வசதிகள் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : – 1)**மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** மேற்படி சாலைகளை நகராட்சி சாலை பதிவேட்டில் பதிவு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**ஒப்பம்/– திருமதி. இ. செல்வராணி,**
**ஆணையாளர்(பொ) மற்றும் தனிஅதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 31.07. 2019**
**இடம். கம்பம்**